# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

30.09.2020–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,**
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

**குறள் :**
கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**133.**வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்களால் காணொளி காட்சி (VC) மூலம் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள கணினியில் பொருத்த வேண்டிய SPEAKER மற்றும் WEB CAMERA வாங்கியதற்கான தொகை ரூ.3000/– ரூபாய் மூவாயிரம் மட்டும் செலவினத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 2011/2020/இ1,) **(அனுமதிக்கப்பட்டது)**

**134.**வந்தவாசி நகராட்சிப்பகுதி வார்டு 1 முதல் 24 வரை உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 9 கிணறுகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் நீர்மட்டம் குறைந்து வருவதால் திரு.மோகன், அனக்காவூர் அவர்களுக்கு சொந்தமான விவசாயக் கிணற்றிலிருந்து குடிநீர் எடுத்துக் கொள்ள திரு.மோகன் ஒப்புதல் தெரிவித்துள்ளார். நீரேற்று நிலையத்திற்கு அருகில் குடிநீருக்கு தகுதியான வேறு கிணறு ஏதுமில்லாததால், திரு.மோகன் அவர்களின் கிணற்றிலிருந்து அவசர அவசியம் காரணமாக, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் தண்ணீர் எடுத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. உத்தேச செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/–

**அலுவலகக் குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 632/2020/இ1,) **(அவசர அவசியம் கருதி அனுமதிக்கப்பட்டது)**

**135.** வந்தவாசி நகராட்சி பொதுப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் ஜீப் வாகன எண்.TN25U7978 என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் பேட்டரி புதியதாக மாற்றவும், மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்யவும் அதை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஜெயின்கார்ஸ் ஆட்டோ சேல்ஸ் பிரைவேட் லிமிடெட், திருவண்ணாமலை என்ற நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கவும், அதற்கான செலவினம் ரூ.94,153.03 (Rupees Ninety Four Thousand One Hundred and Fifty Three & Three Paise Only) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1323/2020/இ1,) **(அனுமதிக்கப்பட்டது)**

**136.** வந்தவாசி நகராட்சி ஆணையாளர் அறையில் உள்ள கணினியில் VC காணொளி காட்சி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருவண்ணாமலை அவர்களால் வாரம் ஒரு முறை காணொளி காட்சி பணிகள் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு குறித்து காணொளி காட்சி மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணினியில் மைக் ரிப்பேர் ஆகி உள்ளதால் அதை புதியதாக வாங்கி கொண்டமைக்கும், அதற்கான செலவினம் ரூ.1700/. மட்டும் குணா கம்யூட்டர்ஸ் என்ற நிறுவனத்தில் திரு.பெ.சிவக்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் வாங்கி வழங்கப்பட்டது எனவே, இத்தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் ஒப்புதலுக்கு.

(ந.க.எண். 2011/2020/இ1,) **(அனுமதிக்கப்பட்டது)**

**137.** வந்தவாசி நகராட்சிப்பகுதியில் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு தேனருவிநகர், அனக்காவூர் தலைமை நீரேற்றுப்பகுதி, செய்யாறு ஆற்றுப்படுகை, இதரப்பகுதிகளில் சுமார் 5 இடங்களில் தேவைப்படின் இதர இடங்களில் புவியாய்வு மேற்கொள்ளவும், அதற்காக TWAD Board Hydrologist அவர்களை பயன்படுத்தி கொள்ளவும், மேலும் Test Bore, soil test Water Test, ஆகிய பணிகளை மேற்கொள்ளவும், மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.1,00,000/– ஆகும்.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 279/2020/ந.அ.ஆ) **(அவசர அவசியம் கருதி அனுமதிக்கப்பட்டது)**

**138.** வந்தவாசி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்திவரும் டிப்பர்லாரி TN25T 6143 தகுதி சான்று காலம் 10.04.2020 உடன் முடிவடைந்து விட்டதால் பொது சுகாதாரம் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், உடன் FC செய்து கொள்ள தகுதி சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பிரதீப் ஆட்டோ ஒர்க்கஸ் வேலூர், அனைத்து பணிகளும் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1,98,850.00 (Rupees One Lakhs Ninety Eight Thousand Eight Hundred and Fifty Only) மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்தல்.
   பொது சுகாதாரம் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும், டிப்பர் லாரி TN25T6143 –ஐ தகுதி சான்று பெற (FC) அனைத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 1,98,850/–க்கு மன்றத்தின் அனுமதி அளித்தல்.

(ந.க.எண். 1204/2020/எச்1,)

**(TN25 T 6143 டிப்பர் லாரி பொதுசுகாதார வாகனம் ஓடிய KM 1028000 ஆகும். அவசரம் அவசியம் முன்னிட்டு செலவிடப்பட்டுள்ளது. 10.04.2021 வரை வட்டார போக்குவரத்து அலுவலகம் வாயிலாக உரிமம், நிறுவனம் வாயிலாக பெறப்பட்டது. மேற்படி காரணங்களுக்காக செலவினம் அனுமதிக்கப்பட்டது)**

**139.** ஆண்டு பங்களிப்பு வேலூார் மண்டல தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்துார் அவர்கள் நிலுவையில் உள்ள ஆண்டு பங்களிப்பு தொகை செலுத்தகோரி இயக்குநர்(பொ) தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்துார் அவர்களின் கடித ந.க.எண்.648/2019/அ2, நாள்.30.07.2020 வரை வந்தவாசி நகராட்சியில் ஆண்டு பங்களிப்பு சந்தா தொகை 2018–2019ம் ஆண்டுக்கு ரூ.20,000/– மற்றும் 2019–2020ம் ஆண்டிற்கு ரூ.20,000/–ம் ஆக மொத்தம் ரூ.40,000/–மட்டும் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு வங்கி வரைவோலை அனுப்பிவைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1517/2020/எச்1) **(அனுமதிக்கப்பட்டது)**

**140.** வந்தவாசி நகராட்சிப்பகுதிக்கு வார்டு–1 முதல் 24 வரை குடிநீர் விநியோகம் செய்துவரும் அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு உட்பட 9 கிணறுகளில் 5 கிணறுகள் சுமார் 5 ஆழத்திற்கு debilt ஆகியுள்ளது. இதனால் குடிநீர் கிடைப்பது குறைந்து வருகிறது. குடிநீர் விநியோகமும் பாதிப்படைந்துள்ளது, ஆகையால் உடனடியாக இந்த 5 கிணறுகளிலும் துார்வாரி தேவைப்படின் கூடுதல் உரைகள் இறக்கி, மோட்டரை தேவையான அளவு கீழ்றைக்க வேண்டியுள்ளது, இப்பணிகளை மேற்கொள்ள அவசரம் அவசியம் காரணமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.2,50,000/–

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0234/2020/இ1, நாள்.25.09.2020) **(அவசர அவசியம் கருதிஅனுமதிக்கப்பட்டது)**

**141.** வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான அனக்காவூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பம்பிங் ஸ்டேஷனில் உள்ள DOL Scarcer with enclosure 5 எண்கள் உடனடியாக மாற்ற வேண்டியுள்ளது, ஆகையால் புதிதாக கொள்முதல் செய்து அமைத்தது குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் பணி மேற்கொள்ள, அவசர அவசியம் காரணமாக SECTION–15ன் கீழ் பணிமேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது. உத்தேச செலவினம் ரூ.50,000/–

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0233/2020/இ1, நாள்.25.09.2020) **(அவசர அவசியம் கருதிஅனுமதிக்கப்பட்டது)**

142.வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட (Construction of chamber for Existing bore well at Kancheepuram road for highway road extension and also attending a leakage) ஆகியவற்றை உடனுக்குடன் செய்து கொடுக்கும் பணிக்கு – பணி உத்தரவு வழங்குதல் தொடர்பாக மதிப்பீட்டுத்தொகை ரூ.29,000/–

1. N.திருநாவுக்கரசு 0.11% சதவீதம் மதிப்பைவிட குறைவு
2. P.முருகேசன் 0.31% சதவீதம் மதிப்பைவிட அதிகம்
3. R.கோவிந்தன் 1.01% சதவீதம் மதிப்பைவிட அதிகம்

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் 0.11% குறைவான விலைப்புள்ளிக்கொடுத்துள்ள N.திருநாவுக்கரசு அவர்களின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1245/2020/இ1,) (அனுமதிக்கப்பட்டது)

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
வந்தவாசி நகராட்சி.